## பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் விசேட அறிவித்தல்
## பாராளுமன்றம் கூடுவதற்காக விடுக்கப்படும் அழைப்பு

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் 155(4)(i) ஆம் உறுப்புரையினால் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிப்பதற்கும் அதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் கலைக்கப்பட்டுள்ள ஆறாவது பாராளுமன்றம் 2010 மார்ச்சு மாதம் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கூடுவதற்கு அழைக்கப்பட்டள்ளது என்பது அறிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான பிரேரணையை (அவசரகாலச் சட்டம்) நிறைவேற்றும் பொருட்டு 2010 மார்ச்சு மாதம் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடாத்தப்படவுள்ள பாராளுமன்றக் கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி ஆறாவது பாராளுமன்றத்தின் சகல கௌரவ உறுப்பினர்களும் தயவுடன் அழைக்கப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் பாராளுமன்ற சபைஆவண அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர்கள் (நிர்வாகம்) திரு. எச். ஈ. ஜனகாந்த சில்வா மற்றும் திரு. எஸ். டீ. சாந்த சாம் அவர்களை தொடர்பு கொள்ளும்படி பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்கள் மேலும் கேட்டுக் கொள்கிறார்.

011-2777549
011-2777273
011-2777304
011-2777367